


அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நேற்று (29.10.2025) திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு–76, பொன்னியம்மன் கோயில் 2வது தெருவில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான குடியிருப்பில் வசிப்பவர்களுக்கு மாற்று குடியிருப்பு வழங்குவது தொடர்பாக பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது மேயர் ஆர்.பிரியா, கலாநிதி வீராசாமி எம்.பி., ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையாளர் எச்.ஆர். கௌஷிக், சரிதா மகேஷ் குமார் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# காணொலிக் காட்சி வாயிலாக

## சென்னை வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு – காஞ்சிபுரம் வடக்கு – திருவள்ளூர் கிழக்கு, மத்திய, வடக்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட

# மாவட்டச் செயலாளர்கள் - நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் - தொகுதி பார்வையாளர்கள் - மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்ச் செயலாளர்கள் கூட்டம்!

## துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. அறிவிப்பு!



சென்னை வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு – காஞ்சிபுரம் வடக்கு - திருவள்ளூர் கிழக்கு, மத்திய, வடக்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட மாவட்டச் செயலாளர்கள் - நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் - தொகுதி பார்வையாளர்கள் – மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்ச் செயலாளர்கள் கூட்டம் வருகிற 31.10.2025, வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியளவில் காணொலி காட்சி வாயிலாக நடைபெறும்.

அதுபோது மேற்குறிப்பிட்ட மாவட்டங்களுக்குட்பட்ட மாவட்டச் செயலாளர்கள் - நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் - தொகுதி பார்வையாளர்கள் - மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்ச் செயலாளர்கள் அனைவரும் தவறாது இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் 28.10.2025 அன்று நடைபெற்ற “என் வாக்குச்சாவடி – வெற்றி வாக்குச்சாவடி’ பயிற்சிக்கூட்டத்தில்” எடுக்கப்பட்ட முடிவுகள் – குறித்து

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29-10-2025.

**ஆ. இராசா, எம்.பி.,**
துணைப் பொதுச்செயலாளர், தி.மு.க.

## மாதவரம் எஸ், சுதர்சனம் முன்னிலையில்! திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில்

# வட்டச் செயலாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## எஸ்.மோகன் பங்கேற்பு! வை. ம.அருள்தாசன் அறிக்கை !

சென்னை,அக்.30-

திருவொற்றியூர் மேற்கு பகுதி செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் அறிக்கை வருமாறு :-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதிக்குட்பட்ட வட்ட கழக செயலாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள்

அவசர ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எம்எல்ஏ ஆலோசனையின் பேரில்

30-10-25 வியாழக்கிழமை மாலை 7.00மணியளவில் ராம கிருஷ்ணா நகர் 3 வது பிரதான சாலையில் உள்ள பகுதி கழக அலுவலகத்தில் பகுதி கழக அவைத் தலைவர் ந. திருசங்கு தலைமையில் நடைபெறுகிறது.

இதில் மாநில வர்த்தகர் அணி துணைத்தலைவர் திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர் தி.நகர் எஸ். மோகன் அவர்கள் பங்கேற்று ஆலோசனை வழங்க உள்ளார்.

அது சமயம் வட்ட கழக செயலாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும் படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:- என் வாக்குச்சாவடி வெற்றிவாக்கு சாவடி - (SIR) சிறப்பு வாக்காளர் பட்டியல் சீர்திருத்த பணிகள் மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

மேற்கண்டவாறு திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை. ம. அருள்தாசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி:

# திருவொற்றியூர் கிழக்குப் பகுதியில் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதி செயலாளர் தி.மு.தனியரசு அறிக்கை!எஸ்,மோகன் பங்கேற்பு!

சென்னை, அக்.30

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் , முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி “என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி”எனும்அடிப்படையில் தேர்தல் களப்பணி தொடங்கிட சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் கிழக்குப்பகுதிதி.மு.க.சார்பில் நடைபெறுகிறது என திருவொற்றியூர் கிழக்கு பகுதிக் கழக செயலாளர், 1வது மண்டலக்குழுத்தலைவர்தி.மு.தனியரசு அறிக்கை விடுத்துள்ளார்.

அவர்விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனையின் படி இன்று (30.10.2025 வியாழக்கிழமை) மாலை5மணிக்குசன்னதிதெருவில்அமைந்துள்ளபகுதிக்கழக அலுவலகத்தில் பகுதி அவைத் தலைவர் ஆர்.சி.ஆசைதம்பி தலைமையில் “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி” எனும் முன்னெடுப்பில் வட்ட செயலாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

இதில் திருவொற்றியூர் தொகுதி பொறுப்பாளர், மாநிலவர்த்தகர்அணிதுணைத் தலைவர் தியகராயர் நகர் எஸ். மோகன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளார்.

ஆகையால்மாவட்டநிர்வாகிகள், பொதுக்குழுஉறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணியின் நிர்வாகிகள், பாக ஒருங்கிணைப்பாளர் அனைவரும் கலந்து கொள்ளும் படி கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு பகுதிக் கழக செயலாளர் தி.மு. தனியரசு கேட்டுக் கொண்டுள்ளார்.

## டி.ஜெகதீஷ் பாபு தலைமை! ராஜாஅன்பழகன் முன்னிலை!

# மயிலை கிழக்கு பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

## எஸ்.முரளி ஆலோசனை வழங்குகிறார்!

சென்னை, அக்.30-

மயிலை கிழக்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் டி.ஜெகதீஷ் பாபு விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை கிழக்கு பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (30.10.2025 - விழாக்கிழமை) மாலை 6 மணி அளவில் மயிலை கிழக்கு பகுதி கழக அலுவலகத்தில் தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவுறுதலின்படி மாவட்ட அமைப்பாளர் ராஜா அன்பழகன் முன்னிலையில் எனது (டி.ஜெகதீஷ் பாபு) தலைமையில் சென்னை தென்மேற்கு மாவட்டம் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் த.விக்னேஸ்வரன் மற்றும் தினேஷ் மாணிக்கம் வரவேற்புரையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி ஆலோசனை வழங்குகிறார்.

எனவே இக்கூட்டத்தில் மயிலை கிழக்கு பகுதி இளைஞர் அணி பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

மயிலை கிழக்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தா. தீபன், வே. ஹேமந்த் குமார், பா. முருகேசன் (எ) குட்டி, மு. நிரஞ்சன் சாய், ரா. சுந்தர், பா.அபினேஷ் பாபு நன்றியுரை கூறுகின்றனர்.

பொருள் : கழக ஆக்க பணிகள்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சென்னை வடக்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை வடக்கு மாவட்டக் கழகக் கூட்டம் இன்று (30.10.2025 – வியாழன்கிழமை) மாலை 5.30 மணியளவில் இராயபுரம் அறிவகத்தில் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.வெற்றிவீரன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் இரா.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், தேர்தல் பார்வையாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், பகுதிக் கழக செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் – துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. SIR – சிறப்பு தீவிர திருத்தம்
2. துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள்.
3. கழக ஆக்கப் பணிகள்.

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**
பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

## திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஒன்றிய – நகர – பேரூர்

# இளைஞர் அணி அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிக்கை



திருவள்ளூர் அக் 30;-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஒன்றிய நகர பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் 30-10-2025 இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு வல்லூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ். கே.ரமேஷ் ராஜ் எனது தலைமையில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ராஜா முன்னிலையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி. லோகேஷ் வரவேற்பில் நடைபெறுகிறது

அதுசமயம் இக்கூட்டத்திற்கு தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி.. ஜெ.கோவிந்தராஜன் எம். எல்.ஏ இ.ஏ.பி.சிவாஜி, பி. ஜெ.மூர்த்தி மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன், மாவட்ட நிர்வாகிகள் மு.கதிரவன், கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, எம்.எல். ரவி, எஸ்.ரமேஷ், , மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ. அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ராபர்ட்ராஜ துரை, ஏ.கே.சுரேஷ் பொது குழு உறுப்பினர்கள் கே.சுப்பிரமணி, பி.வெங்கடாசலபதி, ஏ.வி. ராமமூர்த்தி, பா.செ.குணசேகரன், டாக்டர் பரிமளம் விஸ்வநாதன் கலந்து கொள்கிறார்கள் எனவே திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஒன்றிய நகர பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

பொருள் ;- இளைஞர் அணி சார்பில் நடைபெறும் மண்டல மாநாடு பணிகள் குறித்து மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தமது அறிக்கை வாயிலாக தெரிவித்துக் கொண்டார்.

# NRTIA பஹ்ரைனின் - முப்பெரும் விழா!

## எம்.எம்.அப்துல்லா — பரிதி இளம்சுருதி பங்கேற்பு!

பக்ரைன், அக். 30 -

NRTIA அமைப்பாளர் முகமது ஹுசைன் மாலிம் தலைமையில் NRTIA பஹ்ரைன் சார்பில் முப்பெரும் விழா நடைபெற உள்ளது. இப்பெரும் விழாவில் இந்த விழாவில் இந்தியாவிலிருந்து வருகை தரும் சிறப்பு விருந்தினர்கள்: தி. மு.க. அயலக அணி செயலாளர் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம். அப்துல்லா மற்றும் அயலக அணி துணை செயலாளர் எழும்பூர் தொகுதி 99 மாமன்ற உறுப்பினர் பரிதி இளம் சுருதி கலந்துகொள்கின்றனர்.


இந்த விழா 2025 அக்டோபர் 31, வெள்ளிக்கிழமை, மாலை 6:00 மணிக்கு மனாமாவில் நடைபெறும். இந்த மகிழ்ச்சியான நிகழ்வில் அனைத்து NRTIA உறுப்பினர்களும் கலந்து கொண்டு, இந்த முப்பெரும் விழாவை சிறப்பாக நடத்திட உடன் பிறப்புகள் அழைக்கப்படுகிறார்கள்.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை சிறப்புற ஏற்பாடு செய்துள்ள NRTIA- பஹ்ரைன்.

துணை அமைப்பாளர்கள் சுல்தான் இப்ராஹிம், கருணாநிதி, கபீர் அகமது, எரிச்சி ரவிச்சந்திரன், மன்னை முபாரக், திருமேனி நடராஜன், வேம்பு ராஜ், சதீஷ்குமார், லலித் குமார், சபீக் மீரான் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

## 169 அ வட்டப் பொருளாளர் டி.கண்ணன் தலைமையில்

# தீரன் தீனன் 48வது நினைவு நாள்!



சென்னை, அக். 30.

சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்குப் பகுதி 169 அ வட்டக் கழகப் பொருளாளர் டி.கண்ணனின் மூத்த சகோதரரும் மொழிப்போர் தியாகியுமான தீனன் அவர்களின் நினைவு நாள் நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆணையை ஏற்று. 1977 ஆம் ஆண்டு சைதை சின்னமலை ஹால்டா அருகில் நடைபெற்ற கறுப்புக் கொடி அறப்போராட்டத்தில் பங்கேற்று அன்றைய அரசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் வீர மரணம் அடைந்த தியாக மறவர் பேன்பேட்டை நீரன் தினனுக்கு இன்று (30.10.2025) 48 வது ஆண்டு நினைவு நாளாகும். கழக மாவீரன் தீனனின் நனைவு நாளில் அன்னாருக்கு எங்களது அஞ்சலியை காணிக்கையாக்கிறோம்.

சைதை கிழக்குப் பகுதி 169 அ வட்டப் பொருளாளர், டி.தீனனின் இளவல் பேன் பேட்டை டி.கண்ணன் ஏற்பாட்டில் இன்று (30102025) அன்னாரது படம் அலங்கரித்து வைக்கப் பட்டு, மலரஞ்சலி செலுத்தப் படுகிறது. இதில் கழகத்தினர் பங்கேற்று அஞ்சலி செலுத்து கின்றனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாற்றுத்திறனாளிகள் விவசாயிகள் பொதுமக்களிடம் இருந்து சாலை வசதி, மழை நீர் வடிக்கால் கால்வாய் மற்றும் கழிவு நீர் கால்வாய் , அங்கன்வாடி கட்டிடம் பள்ளி கட்டிடம் பல்வேறு மாற்றுத்திறனாளிக்கான வாகனங்கள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம். எல்.ஏ திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப்பிடம் வழங்கி உடனடியாக கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டார். அருகில் உடன் ஒன்றிய செயலாளர்கள் சி.என்.சண்முகம், பெ.பழனி, பி.டி..சந்திரன், பா.சம்பத், மா.ரகு, ஏ.எல்.விஜயகுமார், உள்பட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.